


புதுகை
வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






## பாஜக அரசை வீழ்த்த 17 கட்சிகள் ஒன்றிணைந்து தேர்தலை எதிர்கொள்ளும்:நிதிஷ் குமார்

# சபதம்

## எதிர்க்கட்சிகளின் அடுத்தக் கூட்டம் இமாச்சலப் பிரதேச தலைநகர் ஷிம்லாவில் நடைபெறும்: காங்கிரஸ் தலைவர்

## மத்திய அரசின் அவசரச் சட்டத்திற்கு காங்கிரஸ் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை: ஆம் ஆத்மி கட்சி

**பாட்னா, ஜூன். 24–**

**பாஜக தலைமையிலான மத்திய அரசை வீழ்த்த 17 கட்சிகள் ஒன்றிணைந்து மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளும் என்று பாட்னா எதிர்க்கட்சிகளின் கூட்டத்துக்குப் பிறகு நிதிஷ் குமார் அறிவிப்பு வெளியிட்டார்.**



அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள பாஜக அல்லாத எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் பிஹார் தலைநகர் பாட்னாவில் நேற்று (ஜூன் 23) நடைபெற்றது. பிஹார் முதல்வர் நிதிஷ் குமாரின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், சிவ சேனா (உத்தவ் பிரிவு) தலைவர் உத்தவ் தாக்கரே உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.

மக்களவைத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக தலைவர்கள் பலரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். 4 மணி நேரம் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டம்நிறைவடைந்ததை அடுத்து, தலைவர்கள் அனைவரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய நிதிஷ் குமார். "இந்த ஆலோசனைக் கூட்டம் நல்ல முறையில் நடந்தது. பல்வேறு தலைவர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். வரும் மக்களவைத் தேர்தலை 17 கட்சிகளும் ஒருங்கிணைந்து எதிர்கொள்வது என்ற முடிவு இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, "எதிர்க்கட்சிகளின் அடுத்தக் கூட்டம் இமாச்சலப் பிரதேச தலைநகர் ஷிம்லாவில் அடுத்த மாதம் நடைபெறும். நாடாளுமன்றத் தேர்தலை இணைந்து எதிர்கொள்வதற்கு ஏற்ப பொதுத் திட்டத்தை வகுக்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம். இதனை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து அடுத்த கூட்டத்தில் முடிவெடுப்போம். இணைந்து செயல்படுவதற்கு ஏற்ப ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியான திட்டங்களை வகுத்து செயல்படுவோம். மத்தியில் உள்ள பாஜகவை வீழ்த்துவதே எங்கள் இலக்கு" எனத் தெரிவித்தார்.

டெல்லி அரசின் அதிகாரம் தொடர்பான மத்திய அரசின் அவசரச் சட்டத்திற்கு காங்கிரஸ் கட்சி வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவிக்காததால் ஆம் ஆத்மி கட்சி அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய அரசின் கருப்புச் சட்டம் மாநிலங்களவையில் தோற்கடிக்கப்பட வேண்டும். இந்த சட்டத்தை காங்கிரஸ் கட்சி இதுவரை வெளிப்படையாக எதிர்க்கவில்லை. இது அதன் உள்நோக்கத்தை வெளிப்படுத்துகிறது. மாநிலங்களவையில் உள்ள எங்கள் கட்சியின் 31 எம்பிக்களும் இந்த சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பார்கள் என்று காங்கிரஸ் கட்சி ஏன் அறிவிக்க மறுக்கிறது? காங்கிரஸ் கட்சி இவ்வாறு செயல்படும் நிலையில், எதிர்க்கட்சிகளின் அடுத்த கூட்டத்தில் ஆம் ஆத்மி பங்கேற்பது கடினம்" எனத் தெரிவித்துள்ளது.

## அகில இந்திய அளவில் பாஜக தோற்கடிக்கப்படும் முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை



**சென்னை , ஜூன். 24–**

"பாஜகவை வீழ்த்துவதை அனைத்து தலைவர்களும், ஒற்றை இலக்காக கொண்டிருக்கிறார்கள். பாஜகவை வீழ்த்த அனைத்து கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று நினைத்தோம். அந்த ஒற்றுமை பாட்னாவிலே ஏற்பட்டிருக்கிறது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

பாஜக அல்லாத எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் பிஹார் தலைநகர் பாட்னாவில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார். ஆலோசனைக் கூட்டம் முடிந்து சென்னை விமான நிலையம் திரும்பிய முதல்வர் ஸ்டாலின், செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "மதச்சார்பற்ற கட்சிகளின் ஒற்றுமைதான் தமிழகத்தில் கிடைத்த அத்தனை வெற்றிகளுக்குமான காரணமாக அமைந்தது. அதேபோல, அகில இந்திய அளவிலும் ஒற்றுமைதான் முக்கியம் என்பதை நான் வலியுறுத்தி வற்புறுத்தினேன். சில முக்கியமான ஆலோசனைகளையும் நான் அந்தக்கூட்டத்திலே வழங்கினேன்.

உதாரணமாக, எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ, அந்தக் கட்சியின் தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம். கூட்டணி அமைக்க முடியவில்லை என்று சொன்னால், தொகுதி பங்கீடுகளை மட்டும் செய்து கொள்ளலாம். அதுவும் முடியவில்லை என்று சொன்னால், பொது வேட்பாளர் அறிவித்துக் கொள்ளலாம்.

தேர்தலுக்குப் பிறகு கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்பது சரியான நிலைப்பாடாக இருக்க முடியாது. அரசியல் கட்சிகளுக்கு இடையே குறைந்தபட்சம் செயல் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இது போன்ற 7 பிரச்சினைகளை சரி செய்ய ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு அமைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கருத்துகளை இந்தக் கூட்டத்தில் பேசும்போதும் நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

பாஜகவை வீழ்த்துவதை அனைத்து தலைவர்களும், ஒற்றை இலக்காக கொண்டிருக்கிறார்கள். பாஜகவை வீழ்த்த அனைத்து கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று நினைத்தோம். அந்த ஒற்றுமை பாட்னாவிலே ஏற்பட்டிருக்கிறது. ஒற்றுமையே வெற்றிக்கு அடிப்படை. நிச்சயமாக அகில இந்திய அளவில் பாஜக தோற்கடிக்கப்படும் என்பதில், சந்தேகம் இல்லை. இப்போதுதான் கருவாகி இருக்கிறது. அது உருவாக இன்னும் சில மாதங்கள் ஆகலாம். அடுத்தடுத்த நடவடிக்கைகள் உங்களுக்கு தெரியபடுத்தப்படும். பாட்னாவில் கூடினோம். மகிழ்ச்சியாக திரும்பியிருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

## சீர்காழி, தரங்கம்பாடி ஆகிய தாலுகாவை பேரிடர் பாதித்த தாலுகாவாக அறிவிக்க கோரி தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் ஆர்ப்பாட்டம்

**சீர்காழி , ஜூன். 24–**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி புதிய பஸ் நிலையம் எதிரில் சீர்காழி, தரங்கம்பாடி ஆகிய தாலுகாவை பேரிடர் பாதித்த தாலுகாவாக அறிவிக்க கோரி தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பொதுச்செயலாளர் பி. ஆர்.பாண்டியன் தலைமை தாங்கினார். விவசாய சங்க மாவட்ட தலைவர் வைத்தியநாதன், மாவட்ட செயலாளர் விஸ்வநாதன், மாவட்ட துணைத் தலைவர் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட



ஒருங்கிணைப்பு குழு தலைவர் வேட்டங்குடி சீனிவாசன் வரவேற்பு பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு பொதுச்செயலாளர் பி ஆர் பாண்டியன் கலந்து கொண்டு பேசுகையில், கடந்த ஆண்டு வரலாறு காணாத அளவில் பெய்த தொடர் மழையால் பாதிக்கப்பட்ட சீர்காழி, தரங்கம்பாடி ஆகிய தாலுகாவை பேரிடர் பாதித்த தாலுகாவாக அறிவிக்க வேண்டும். தேசிய வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

சீர்காழி தரங்கம்பாடி, தாலுகாவில் விடுபட்ட வருவாய் கிராமங்களுக்கு உடனடியாக பயிர் காப்பீட்டுதொகைவழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை வலியுறுத்தி பேசினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் பாரதிய கிசான் சங்க மாவட்ட செயலாளர் லிங்கேஸ்வரன், விவசாய சங்க தலைவர்கள் ரகு, ரவிச்சந்திரன், அசோகன், ராஜேந்திரன், வரதராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து புதிய பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக உதவி கலெக்டர் அலுவலகம் சென்று மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை மனுக்களை உதவி கலெக்டர் அர்ச்சனாவிடம் வழங்கினார்.

## புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் தொண்டைமான் 101 வது பிறந்தநாள் கொண்டாட்டம்

**புதுக்கோட்டை , ஜூன். 24–**

**தமிழகத்தில் ஆட்சி செய்த கடைசி தமிழ் மன்னர் என்ற பெருமையை பெற்ற ராஜகோபால தொண்டைமான் மன்னருக்கு 101 –ஆவது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது.**

புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் ராமச்சந்திர தொண்டைமானின் மகனாக 1922 –ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 –ஆம் தேதி பிறந்தார் ராஜகோபால தொண்டைமான். தனது ஆறாவது வயதில் புதுக்கோட்டை சமஸ்தான மன்னராக பதவி ஏற்றார். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், மன்னரின் வாரிசு ராஜா ராஜகோபால தொண்டைமான், திருச்சி மாநகராட்சி முன்னாள்



மேயர் சாருபாலா ஆர். தொண்டைமான், கம்பன் கழகச்செயலாளர் ரா. சம்பத்குமார், நகர்மன்ற துணைத்தலைவர் எம். லியாகத்அலி, விநாயகாபார்மா குமார், மூத்த மருத்துவர் எஸ். ராமதாஸ்,

இந்திய விவசாயிசங்க தலைவர் ஜி.எஸ். தனபதி, எம்ஆர்எம். முருகப்பன், குமார் காடுவெட்டியார், கவிஞர் நிலவை பழனியப்பன், அமமுக மாவட்ட செயலர் வீரமணி, அரசு சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, கம்பன் கழக கூடுதல் செயலர் ச. பாரதி மற்றும் மன்னர் நூற்றாண்டு விழா குழு சான்றோர்கள் கலந்து கொண்டு உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். ஏற்பாடுகளை நேர்முக உதவியாளர் சக்திவேல் உள்ளிட்டோர் செய்திருந்தார்.

## "புகைப்படக் காட்சிக்கான ஒன்றுகூடல்" எதிர்க்கட்சிகளின் பாட்னா கூட்டத்தை விமர்சித்த அமித் ஷா

**ஜம்மு, ஜூன். 24–**

காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் ரூ. 12 லட்சம் கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டி உள்ளார். மேலும், பாட்னாவில் ஒருங்கிணைந்துள்ள எதிர்க்கட்சிகளை புகைப்படக்காட்சிக்காக ஒன்றுகூடியுள்ளதாக அவர் விமர்சித்தார்.

ஜம்மு காஷ்மீர் சென்றுள்ள அமித் ஷா, ஜம்மு நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: "காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் ரூ. 12 லட்சம் கோடி அளவுக்கு ஊழல் நடந்துள்ளது.



தற்போது நரேந்திர மோடி அரசு ஊழலுக்கு எதிரான வலுவான கட்டமைப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

ஜம்மு காஷ்மீரை மூன்று குடும்பங்கள்தான் பல பத்தாண்டுகளாக ஆட்சி செய்து வந்தன. சட்டப்பிரிவு 370 காரணமாக ஜம்மு காஷ்மீரில் வளர்ச்சி ஏற்படவில்லை. அதோடு, ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதத்துக்கு 42 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர்.


இத்தனை பேர் உயிரிழப்புக்கு யார் பொறுப்பு? தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா பொறுப்பேற்பாரா? மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் மெகபூபா முஃப்தி பொறுப்பேற்பாரா? ஆனால், அவர்கள் சட்டப்பிரிவு 370 ரத்து செய்யப்பட்டிருக்கக் கூடாது என்று கூறுகிறார்கள். நரேந்திர மோடி ஆட்சியில் பயங்கரவாதத்திற்கு எதிராககடும்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று அமித் ஷா உரையாற்றினார்.

பிஹார் தலைநகர் பாட்னாவில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவது குறித்துப் பேசிய அமித் ஷா, "புகைப்படக்காட்சிக்காக அவர்கள் ஒன்றுகூடி இருக்கிறார்கள். பாஜவை எதிர்க்க வேண்டும் என நினைக்கிறார்கள். எவ்வளவு முயன்றாலும் அவர்களால் ஒன்றிணைய முடியாது. ஒருவேளை அவர்கள் ஒன்றிணைந்தாலும் 300 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மேலாக வெற்றி பெற்று நரேந்திர மோடி மீண்டும் பிரதமராவதை மக்கள் உறுதி செய்வார்கள்" என்று தெரிவித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்









### 'டைட்டன்' நீர்மூழ்கிக் கப்பல் விபத்து

# பல ஆண்டுகளுக்கு முன்பே கணித்ததா 'தி சிம்ப்ஸன்ஸ்' கார்ட்டூன் தொடர்?





நியூயார்க் , ஜூன். 24–

டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்காக ஆழ்கடலுக்கு சென்ற டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளானது குறித்து பல ஆண்டுகளுக்கு முன்னரே 'தி சிம்ப்ஸன்ஸ்; தொடர் கணித்திருப்பதாக ஒரு வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

கடந்த 1912ஆம் ஆண்டு பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளான டைட்டானிக் கப்பலின் சிதிலமடைந்த பகுதிகள், கனடா அருகே அட்லான்டிக் கடல் பகுதியில் 12,500 அடி ஆழத்தில் மூழ்கிக் கிடக்கிறது. ஆழ்கடலில் மூழ்கியிருக்கும் டைட்டானிக் கப்பலின் பாகங்களை பார்வையிடும் சாகச சுற்றுலாவை அமெரிக்காவைச் சேர்ந்த ஓசன்கேட் என்ற நிறுவனம் பல ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இதற்காக 'டைட்டன்' என்ற சிறப்பு நீர்மூழ்கிக் கப்பல் பயன்படுத்தப்படுகிறது. இதில் ஒரு பைலர் மற்றும் 4 பயணிகள் என 5 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். இந்தப் பயணத்துக்கு ஒருவருக்கு ரூ.2 கோடி கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தப் பயணத்தில் இங்கிலாந்து, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 5 கோடீஸ்வரர்கள் பங்கேற்றனர். டைட்டன் நீர்மூழ்கியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணம் தொடங்கிய 1.45 மணி நேரத்தில் நீர்மூழ்கியுடன் இருந்த தகவல் தொடர்பு துண்டானது. இதற்கிடையே நீண்ட தேடுதல் பணிக்குப் பிறகு, 5 பேருடன் மாயமான டைட்டன் நீர்மூழ்கிக் கப்பல் வெடித்து இருக்கலாம் என்று ஓசன்கேட் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் பயணிகள் 5 பேரும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த விபத்து குறித்து பல ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்காவில் பிரபலமான 'தி சிம்ப்ஸன்ஸ்' கார்ட்டூன் தொடரில் காட்டப்பட்டிருப்பதாக ஒரு வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோ 2006ஆம் ஆண்டு ஒளிபரப்பான 'தி சிம்ப்ஸன்ஸ்' தொடரின் 17வது சீசனில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. அதன் 10வது எபிசோடில் பல ஆண்டுகளுக்கு முன்பு நீரில் மூழ்கிய 'Piso Mojado' என்ற கப்பலில் இருக்கும் பொக்கிஷங்களை எடுப்பதற்காக நாயகன் ஹோமர் சிம்ப்ஸன் தனது தந்தையுடன் நீர்மூழ்கிக் கப்பலில் பயணிக்கிறார். பவளப் பாறை ஒன்றில் சிக்கிக் கொள்ளும் நீர்மூழ்கிக் கப்பலில் ஆக்ஸிஜன் குறைந்து ஹோமர் அதில் மாட்டிக் கொள்வது போல காட்டப்பட்டுள்ளது. ஆச்சர்யமூட்டும் இன்னொரு விஷயம் என்னவென்றால், பாகிஸ்தானில் இருந்து இந்தப் பயணத்தில் கலந்து கொண்ட ஷாஜதா தாவூத் மற்றும் மகன் சுலேமான் தாவூத் இருவரும் தந்தையும் மகனும் ஆவர். நெட்டிசன்கள் இந்த விபத்தை 'சிம்ப்ஸன்ஸ்' தொடருடன் ஒப்பிட்டு தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர்.

இதே போல 'தி சிம்ப்ஸன்ஸ்' தொடர், டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபர் ஆவது குறித்தும், ரஷ்யா - உக்ரைன் போர், கொரோனா வைரஸ் ஆகியவை குறித்தும் பல ஆண்டுகளுக்கு முன்பே கணித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்புடன் கரூரில் மீண்டும் வருமான வரித் துறையினர் சோதனை



கரூர் , ஜூன். 24–

கரூரில் மீண்டும் வருமான வரித் துறையினர் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்புடன் சோதனையில் ஈடுப்பட்டனர்.

கடந்த மே மாத இறுதியில் மாநில மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சராக இருந்த வி.செந்தில்பாலாஜி தம்பி அசோக்குமார், அவரது உறவினர்கள், நண்பர்கள் ஒப்பந்ததாரர் உள்ளிட்டவர்களின் கரூரில் உள்ள வீடுகள், கல்குவாரி, அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தினர்.

அதன் பின்னர் வருமான வரித் துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் அமலாக்கத் துறை அதிகாரிகள் செந்தில்பாலாஜியின் வீடு மற்றும் அலுவலகம் அவரது , சகோதரர், உறவினர்கள் வீடுகளில் சோதனை நடத்தினர். அந்த சோதனையின் முடிவில் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் கடந்த மாதம் வருமான வரித் துறையினர் நடத்திய சோதனையின்போது சக்தி மெஸ் பங்குதாரர்கள் கார்த்தி, ரமேஷ் ஆகியோர் வீடுகளில் சில அறைகளுக்கு சீல் வைக்கப்பட்டது. நேற்று (ஜூன் 23) சீல் வைக்கப்பட்ட அறைகளில் 20-க்கும் மேற்பட்ட மத்திய பாதுகாப்புப் படை வீரர்கள் பாதுகாப்புடன் சோதனை நடத்தினர்.






# கடையநல்லூரில் ராகுல்காந்தி பிறந்தநாள் கொண்டாடப்பட்டது



தென்காசி , ஜூன். 24–

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகர காங்கிரஸ் சார்பில் ராகுல்காந்தியின் 53 வது பிறந்த தினத்தை பள்ளிவாசல் மணிக்கூண்டு அருகே கொண்டாடினர். நிகழ்ச்சிக்கு நகர காங்கிரஸ் தலைவர் எம்.முகம்மது அபுதாஹிர் தலைமை தாங்கினார். காங்கிரஸ் கொடியை மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர்கள் எஸ்.எம்.ஏ.சர்புதீன்,பி.சமுத்திரம் கொடிஏற்றினார்கள். மாவட்ட காங்கிரஸ் அமைப்புச்செயலாளர் எஸ்.எம்.மஸ்தான் வி.மாடசாமி. மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர்.எஸ்.ஆர்.எஸ்.ரமேஷ் ஆகியோர் கேக் வெட்டினர்.

நிகழ்ச்சியில் நகர துணைத் தலைவர்கள் எம்.எம்.அபுபக்கர்,எம்.ஹெச்.ஏ.காதர்,ஊடகப்பிரிவு செல்லக்குமார் ஆசிரியர்,ஒசலாத்தன் யூசுப்,சித்திக்,முபாரக்,தியாகராஜன் மற்றும் திரளானவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் கல்யாணியுடன் ஐந்து பேர் தங்களை காங்கிரஸில் இணைந்துக்கொண்டனர்.

# கோட்டைமேடு பள்ளி ஆயத்த பயிற்சி மையத்திற்கு மகளிர் சுய உதவிக்குழுவினர் உதவி



அன்னவாசல் , ஜூன். 24–

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைமேடு பள்ளி ஆயத்த பயிற்சி மையத்திற்கு இலுப்பூர் பகுதியை சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுவினர் பொருளதவி அளித்தனர்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அன்னவாசல் வட்டார வள மையத்திற்குட்பட்ட கோட்டைமேடு தொடக்கப் பள்ளியில் இயங்கி வரும் பள்ளி ஆயத்த பயிற்சி மையத்தில் இலுப்பூர் பகுதியை சேர்ந்த மகளிர் சுய உதவிக்குழுவினர் தன்னார்வமுடன் மாற்றுத்திறன் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக நோட்டு, பேனா, பென்சில் பயிற்சிக்குறிய தேன் பாட்டில்கள், பவுடர் என சுமார் இரண்டாயிரம் மதிப்புள்ள பொருட்களை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர்.

மகளிர் குழுவின் தலைவி பழனியம்மாள் இது குறித்து கூறுகையில்:- மாற்றுத்திறன் குழந்தைகள் எண்ணும் எழுத்தும் கற்றுக்கொள்ள மகளிர் நாங்கள் இணைந்து சிறிய உதவி செய்து இருக்கிறோம். இது மிகவும் மனநிறைவு தருகிறது. தொடர்ந்து இயன்ற உதவிகளை செய்வோம் என்றார். தலைமை ஆசிரியர் ஜியோ ராஜாமணி மகளிர் குழுவின் மகத்துவ பணி குறித்து பாராட்டி பேசினார். மாற்றுத்திறன் குழந்தைகளின் பெற்றோர்கள் மைய சிறப்பு பயிற்றுநர் பாஸ்கர சேதுபதி, இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி,பள்ளி ஆசிரியைகள் வேலம்மாள், ஜெமி நிட் பகல் நேரமைய ஆசிரியர் ராஜாமணி உதவியாளர் சித்ரா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# கந்தர்வகோட்டையில் நடிகர் விஜய் பிறந்த நாளை ரத்ததானம், அன்னதானம் வழங்கியும் கொண்டாடிய ரசிகர்கள்



கந்தர்வகோட்டை, ஜூன். 24–

கந்தர்வகோட்டையில் நடிகர் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு வியாழக்கிழமை அவரது ரசிகர்கள் ரத்ததானம் வழங்கியும், அன்னதானம் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தமிழகம் முழுவதும் நடிகர் விஜய் பிறந்தநாளை அவரது ரசிகர்கள் எப்போதும் இல்லாத அளவிற்கு மிகுந்த உற்சாகத்துடன் இந்தாண்டு கொண்டாடி வருகின்றனர். இதன் ஒருபகுதியாக கந்தர்வகோட்டை தனியார் திருமண மண்டபத்தில் தளபதி விஜய் மக்கள் இயக்கம் சார்பில் நடிகர் விஜய் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட தலைவர் மற்றும் சிவகங்கை மாவட்ட பொறுப்பாளர் ஜாபர்பர்வேஸ் வழிகாட்டுதலின் படி ஒன்றிய தலைவர் விஜய் பிரசாத் தலைமையிலும், ஒன்றியப் பொருப்பாளர் அய்யாத்துரை முன்னிலையில். புதுநகர் வட்டார மருத்துவ அலுவலர் மணிமாறன் தஞ்சை மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி மருத்துவ அலுவலர் வேல்முருகன் மருத்துவ குழுவினர், சுகாதார மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட மருத்துவகுழுவினர் கலந்து கொண்டனர்.

# தினமும் யோகா செய்தால் நீடித்த ஆயுளை பெறலாம் புதுக்கோட்டையில் நடந்த விழிப்புணர்வு முகாமில் தகவல்



புதுக்கோட்டை, ஜூன். 24–

புதுகை பண்பலை 91.2 சமுதாய வானொலி மற்றும் ஆசியாவிற்கான காமன்வெல்த் கல்வி ஊடக மையம் (சிம்கா), புதுதில்லி இணைந்து நடத்திய சர்வதேச யோகா தின விழிப்புணர்வு நிகழ்ச்சி புதுக்கோட்டை பெருங்கொண்டான்விடுதி சவுத் ஸ்ப்ரிங் சர்வதேச பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைவர் டாக்டர் நாகூர்கனி, தாளாளர் எஸ்.ஹெச்.அனிதா ஆகியோர் தலைமை தாங்கினர். பள்ளி முதல்வர் ஏ.ஜான் பால் முன்னிலை வகித்தார். ஆசிரியர் நந்தகுமார் வாழ்த்துரை வழங்கினார். புதுகை பண்பலை சார்பில் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மா.நாகநாதன் கருத்துரை வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது. "யோகா என்றால் இணைதல் என்று பொருள். மனம் மற்றும் உடலை ஒருங்கிணைப்பதன் மூலம் நாம் நீடித்த ஆரோக்கியத்தையும் ஆயுளையும் பெறமுடியும். யோகா அறிவியல் ரீதியான பின்புலம் கொண்ட ஒரு இயற்கை முறையாகும் தினமும் வீட்டில் பத்மாசனம், சிம்மாசனம், புஜங்காசனம், யோகமுத்ரா, சவாசனம், விருச்சிக ஆசனம் போன்ற எளிய யோகா முறைகளை நாம் செய்யலாம். காலை அல்லது மாலை வேளைகளில் யோகா செய்ய வேண்டும். யோகா செய்வதற்கு முன்பு மூச்சுப்பயிற்சி செய்வது நல்லது. இது மாணவர்களுக்கு நல்ல ஞாபகசக்தியை கொடுக்கும். தூக்கமின்மை, குழப்பம் போன்ற பிரச்சினைகளை சரிசெய்யும். யோகா செய்வதை நம்வாழ்வில் ஒரு பழக்கமாக கொள்ள வேண்டும். யோகா பற்றிய படிப்புகளை பல்வேறு பல்கலைக்கழகங்கள் கல்வி நிறுவனங்கள் வழங்கிவருகின்றன. யோகாவும், உடற்பயிற்சியும் ஒன்றல்ல என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு யோகா முறைக்கும் ஒரு மருத்துவ பண்பு உண்டு.

"நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் ஆராய்ச்சி கழக திட்ட ஒருங்கிணைப்பாளர் ப.அஜித்குமார் யோகாவின் பயன்கள் குறித்து சிறப்புரை வழங்கினார். பள்ளியை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பல்வேறு யோகா முறைகளை செய்து காண்பித்தனர். தேசிய அளவில் நடைபெற்ற யோகா போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. முன்னதாக உடற்கல்வி ஆசிரியர் ஜி.காமராஜ் அனைவரையும் வரவேற்றார்.

ஆசிரியர் சண்முகசுந்தர் நன்றியுரை ஆற்றினார். மற்றொரு யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சி திருமயம் ஒன்றியம் பி.அழகாபுரி கிராமத்தில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்றதலைவர் ஏ.எல்.மணிவாசகம் தலைமை தாங்கி பேசினார். ஊராட்சி செயலர் வைரவன் அனைவரையும் வரவேற்றார். புதுகை பண்பலை சார்பில் யோகா பற்றிய விழிப்புணர்வு கருத்துரை வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட கிராமபொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# "இந்தியா வளரும்போது ஒட்டுமொத்த உலகமும் வளரும்" அமெரிக்க நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரை



வாஷிங்டன் , ஜூன். 24–

இந்தியா வளரும்போது ஒட்டுமொத்த உலகம் முழுவதும் சேர்ந்தே வளரும் என்று அமெரிக்கா நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றியுள்ளார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அழைப்பை ஏற்று, பிரதமர் நரேந்திர மோடி கடந்த 20-ம் தேதி டெல்லியில் இருந்து சிறப்பு விமானத்தில் அமெரிக்கா சென்றார். நியூயார்க்கில் உள்ள ஐ.நா. சபை வளாகத்தில் 21-ம் தேதி நடந்த யோகா தின விழாவில் பங்கேற்றார். 2-ம் நாளான வியாழன் வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோ பைடனை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார். பின்னர் விருந்து நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.

பின்னர் அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார். முன்னதாக 2016ல் மோடி அமெரிக்கா வந்திருந்தபோது அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

பிரதமர் மோடி தன் உரையில், "அமெரிக்க நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுவது என்பது மிகப்பெரிய கவுரவம். அதை இருமுறை பெறுவது என்பது தனிச்சிறப்பான கவுரவம்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான உறவு ஜனநாயக நெறிகளால் கட்டமைக்கப்பட்டது. இரு நாட்டு அரசியல் சாசனமும் 'மக்களாகிய நாம்' (We The People) என்ற வார்த்தைகளோடுத்தான் தொடங்குகின்றன. இரு நாடுகளும் அதன் பன்முகத்தன்மையில் பெருமிதம் கொள்கின்றன. இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பயணிப்பது உலக நன்மைக்கும், சர்வதேச அமைதிக்கும், நிலைத்தன்மைக்கும் வித்திடும்.

கடந்த 7 ஆண்டுகளில் உலகில் நிறைய மாற்றங்கள் நடந்துள்ளன. ஆனால் இந்தியாவும், அமெரிக்காவும் தனது உறவை ஆழப்படுத்துவதில் உறுதியுடன் முன்னேறியுள்ளன. இந்த ஏஐ (செயற்கை நுண்ணறிவு) காலத்தில் இன்னொரு ஏஐ-ம் (அமெரிக்க - இந்திய உறவு) நிறைய முன்னேற்றத்தை கண்டுள்ளது.

சபாநாயகர் அவர்களே, ஒரு துடிப்பான ஜனநாயகத்தின் பிரதிநிதியான நான் ஒரு விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய பணி நிச்சயமாக கடினமானதுதான். பல்வேறு கருத்து மோதல்களையும், சித்தாந்த வேறுபாடுகள் மீதான விவாதங்களையும் எதிர்கொள்வதன் சிக்கல் எனக்குத் தெரியும். உங்களுக்கு எப்போதெல்லாம் ஆலோசனை வேண்டுமோ அப்போதெல்லாம் நான் உதவத் தயாராக இருக்கிறேன்.

நான் முதன்முதலில் அமெரிக்கா வந்தபோது இந்தியா உலகின் 10-வது பெரிய பொருளாதார நாடாக இருந்தது. ஆனால் இப்போது 5-வது பொருளாதார வல்லரசாக உள்ளது. நிச்சயமாக விரைவில் உலகில் 3-வது பெரிய பொருளாதார வல்லரசாக இந்தியா உருவெடுக்கும். இந்தியா வளரும்போது இந்த ஒட்டுமொத்த உலகமும் வளரும்.

ஜனநாயகத்தின் ஆன்மா, அனைவரையும் உள்ளடக்கும் கொள்கை, நீடித்ததன்மை ஆகியன நம்மை (இந்தியா மற்றும் அமெரிக்கா) அடையாளப்படுத்துகிறது. இவைதான் உலகம் மீதான நம் பார்வையையும் தீர்மானிக்கிறது. இந்தியா இந்த பூமியின் மீதான அக்கறையுடன் வளர்கிறது. இந்தியக் கலாச்சாரம் சுற்றுச்சூழலை ஆழமாக மதிக்கிறது. இந்தியாவின் வளர்ச்சிக் கொள்கை பூமியின் வளம் சார்ந்தது. இந்தியாவின் இலக்கு பூமியின் வளத்தை உறுதி செய்தல்.

உக்ரைன் மோதலால் ஐரோப்பாவுக்குள் போர் திரும்பியுள்ளது. இது அந்தப் பிராந்தியத்தில் மிகுந்த வலியை ஏற்படுத்துகிறது. இதில் பெரும் வல்லரசுகள் ஈடுபட்டுள்ளதால் விளைவுகளும் கடுமையாக உள்ளன. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் போருக்கான காலம் இது இல்லை. இது பேச்சுவார்த்தைக்கும், ராஜதந்திரத்துக்குமான காலம்.

இரட்டை கோபுர தாக்குதல் நடந்து 20 ஆண்டுகளுக்குப் பின்னரும், மும்பை தாக்குதல் நடந்த 10 ஆண்டுகளுக்குப்பின்னரும் அடிப்படைவாதமும், பயங்கரவாதமும் இன்னமும் அப்படியே அதே அபாயத்தை அச்சுறுத்தலை உலகுக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றன. பயங்கரவாதம் மனிதநேயத்தின் எதிரி. அதை எவ்வித தயக்குமும் சுணக்கமும் காட்டாமல் ஒடுக்க வேண்டும்.

பெருந்தொற்று காலத்திலிருந்து விடுபட்டுவரும் நாம் இந்த உலகுக்கு புதிய ஒழுங்கைத் தர வேண்டும். அதனால் தான் ஜி20 குழுவில் ஆப்பிரிக்க யூனியனுக்கு முழு பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்று நான் நம்புகிறேன். பலதரப்பு முன்னேற்றத்துக்கு முக்கியத்துவம் தர வேண்டும். உலகம் மாறும்போது நாமும் மாற வேண்டும்.

வற்புறுத்தல், மோதல் ஆகியவை இந்திய - பசிபிக் பிராந்தியத்தியத்தை கருமேகம் போல் சூழ்ந்துள்ளன. இந்தப் பிராந்தியத்தின் அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்தப் படுவதுதான் இந்தியா - அமெரிக்கா உறவின் மைய நோக்கம்.

நான் 2016-ல் இங்கே உரையாற்றும்போது, இந்தியா - அமெரிக்கா நட்புறவு எதிர்காலத்தை முன்னெடுத்துச் செல்ல முதன்மையானது என்று சொல்லியிருக்கிறேன். அந்த எதிர்காலம் இதுதான். இவ்வாறாக பிரதமர் மோடி பேசினார்.

# பூம்புகார் சுற்றுலா தளம் மேம்படுத்தும் பணிகள் சுற்றுலாத்துறை அமைச்சர் நேரில் ஆய்வு



சீர்காழி, ஜூன். 24-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த பூம்புகாரின் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க சுற்றுலா தளத்தை பல்வேறு உள்கட்டமைப்புகளுடன் கூடிய உலக தரத்தில் மேம்படுத்துவதற்கான பணிகள் தமிழ்நாடு சுற்றுலாத்துறை சார்பாக 23 கோடியே 60 லட்சம் மதிப்பீட்டில் கடந்த ஏப்ரல் மாதம் அடிக்கல் நாட்டப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி மயிலாடுதுறை பொறுப்பு அமைச்சரும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்ய நாதன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து சுற்றுலா தளத்தை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா தளத்தை பல்வேறு உள்கட்டமைப்புடன் மேம்படுத்தப்படும் பணிகளை சுற்றுலா துறை அமைச்சர் ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அங்கு இருந்த அதிகாரிகளிடம் பணிகள் தரமாகவும் விரைவில் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டுமென கேட்டுக்கொண்டார். தொடர்ந்து வரலாற்று சிறப்புமிக்க பூம்புகார் கலைக்கூடத்தில் நடைபெறும் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் சுற்றுலாத்துறை செயலாளர் மணிவாசன், சீர்காழி கோட்டாட்சியர் அர்ச்சனா, வட்டாட்சியர் செந்தில்குமார் சுற்றுலாத்துறை அதிகாரிகள் மற்றும் பூம்புகார் கிராம மக்கள் உடன் இருந்தனர்.



சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலம் தண்டையார் பேட்டை 38 வது வார்டுக்கு உட்பட்ட பகுதியில் மழை காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் இந்த பகுதியில் மக்கள் அவதிப்பட்டு வந்தனர் 38 வது மாமன்ற உறுப்பினர் நேதாஜி கணேசனிடம் மழை நீர் வடிகால்வாய் அமைத்து தர கோரிக்கை பொதுமக்கள் வைத்தனர் அதன் அடிப்படையில் 2. 39 கோடி செலவில் புதிதாக மழை நீர் கால்வாய் அமைக்கும் பணி இன்று காலை தண்டையார்பேட்டை மண்டல குழு தலைவரும் 38 வது வார்டு மாமன்றஉறுப்பினர் நேதாஜி கணேசன் தலைமையில் நடைபெற்றது இதற்கான பூமி பூஜையை ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் கலந்து ஜேஜே எபினேசர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார் இந்த பணிகள் ரூபாய் 2.39 கோடி செலவில் நேதாஜி நகர் ராஜீவ் காந்தி நகர் வினோபா நகர் ஆகிய பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆர்கே நகர் பகுதி செயலாளர் ஜெபதாஸ் பாண்டியன்.வட்ட செயலாளர் சுந்தர் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் பொதுமக்கள் திமுகவினர் கலந்து கொண்டனர்.

சீர்காழியில் ஜமாபந்தி நிறைவு 706மனுக்கள் பெறப்பட்டுள்ளது

# முதியோர் உதவித் தொகைக்கான சான்றிதழை வழங்கினார் கோட்டாட்சியர்



சீர்காழி, ஜூன். 24-

சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்து வந்த வருவாய் தீர்வாயம் எனும் ஜமாபந்தி நிறைவடைந்தது. சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் 94 வருவாய் கிராமங்களுக்கான வருவாய் கணக்கு தீர்வாயம் கடந்த 7ம் தேதி தொடங்கி நடைபெற்று வந்தது.

இதில் நாள்தோறும் பட்டாமாற்றம், பெயர்மாற்றம், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை போன்ற பல்வேறு தேவைகளுக்கு கிராமங்கள் தோறும் கோரிக்கை மனுக்கள் அளிக்கப்பட்டுவந்தது.

இதுவரை 706மனுக்கள் பெறப்பட்டது. அதில் 106மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 278மனுக்கள் நிராகரிக்கப்பட்டது.

322 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிறைவு நாளில் கோட்டாட்சியர் அர்ச்சனா பங்கேற்று முதியோர் உதவித்தொகை மனு அளித்தவர்களுக்கு பரிசீலித்து உரிய பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். அப்போது வட்டாட்சியர் செந்தில்குமார், தனி வட்டாட்சியர்கள் சாந்தி, இளங்கோவன், நாகலெட்சுமி, துணை வட்டாட்சியர் ரஜினி, வருவாய் ஆய்வாளர் சுகன்யா, கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். நிறைவில் முதுநிலை கணக்கர் கணேசன் நன்றிக்கூறினார்.

# மறைமலைநகரில் பாரதிய ஜனதா கட்சி சார்பாக மக்கள் சேவை மையம் திறப்பு





செங்கல்பட்டு,ஜூன், 24 -

பாரதிய ஜனதா கட்சியின் 9 ஆண்டு கால ஆட்சியின் சாதனைகளை போற்றி கொண்டாடுகின்ற வகையில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இதனை கொண்டாடும் வகையில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டத்தில் மறைமலைநகர் பகுதியில் மக்களுக்கான பல நல்ல திட்டங்கள் செய்திட பாஜக மறைமலை நகர் மண்டல தலைவி சத்திய பிரியா விஜயகுமார் ஏற்பாட்டில் மக்கள் மையம் திறக்கப்பட்டது.

இந்த மையமானது நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள் யாருடைய பரிந்துரையும் இன்றி ரூ.5 லட்சம் மருத்துவ காப்பீடு திட்டம், அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் பலரும் பயன்பெறும் வகையில் தேசிய ஆதார் அட்டையின் மூலம் கிடைக்கும் அனைத்து சலுகை சேவைகளும் செய்து தரப்படும்.

இந்த அலுவலகத்தை பாஜக செங்கல்பட்டு வடக்குமாவட்டதலைவர் வேதசுப்பிரமணியம் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் நகர மகளிரணி சார்பில் நமோ சேவை மையம் திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா மண்டல் தலைவர் மோகனசுந்தரம் முன்னிலையில், மாநில மகளிரணி செயலாளர் மகேஷ்வரி அலுவலகத்தை திறந்து வைத்தார். மாவட்ட மகளிரணி தலைவி விஜயலட்சுமி சூர்யா குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மகளிரணி துணை தலைவர்கள் கலாராணி அறிவுச்செல்வம், ராஜி சுரேஷ், மாவட்ட மகளிரணி பொது செயலாளர்கள் ஷீஜா சசிந்திரன், சௌபாக்கியா முரளி, பொருளாளர் ஷகிலா, மாவட்ட மகளிரணி செயலாளர்கள் சத்தியா டில்லிகுமார், சிதம்பரபாலா, மற்றும் மாவட்ட நிர்வாகிகள் ராதிகா ரமேஷ், ரத்தின சுப்பிரமணியம், தனசேகர், ஜோதி பிரகாஷ், கிருஷ்ணராஜ சேகர், மாநில செயற்குழு உறுப்பினர் குருமூர்த்தி மற்றும் மாவட்ட மண்டல் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புது வண்ணாரப்பேட்டை ஆவூர் முத்தையா தெருவில் இயங்கி வந்த டாஸ்மார்க் கடை கடை எண் 30 தமிழக அரசு மூடியதால் தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆர்கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே முயற்சியால் கடை மூடப்பட்டதற்கு ஆவூர் முத்தையா மேஸ்திரி தெரு, குடியிருப்பு சங்கத்தை சேர்ந்தவர்கள் மற்றும் திமுகவினர் பட்டாசு வெடித்தனர் . ஆர்கே சட்டமன்ற உறுப்பினர் ஜேஜே எபினேசர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பள்ளி குழந்தைகளுக்கு, மாணவர்களுக்கு, மாநகர பேருந்து பயணிகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர் கஜேந்திரன் கதிரேசன் 39 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தேவி கதிரேசன், பாலு, புத்தன், சத்தியநாராயணன், சுரேஷ் பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

சென்னை அரசு மேல்நிலைப்பள்ளியில்

# விதவிதமான ஹேர் ஸ்டைலில் வந்த மாணவர்களுக்கு முடி வெட்டிய தலைமை ஆசிரியர்



சென்னை, ஜுன்,24

சென்னை திருவொற்றியூர் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ளது இப்பள்ளியில் 1350.மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர் .

தற்பொழுது மாணவர்கள் சேர்க்கைக்காக வரும் மாணவர்கள் தலைமுடி அதிகமாக வைத்து இருந்தாலும், விதவிதமாக தலைமுடி வெட்டிவந்தால் பெற்றோர்கள் அழைத்து பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் பாலாஜி அறிவுரை வழங்கி மாணவன் தலைமுடி வெட்டிய பின்னர் பள்ளியில் சேர்த்து கொண்டார்.

கடந்தவாரம் பள்ளிகள் திறக்கப்பட்டு பள்ளிகள் தொடங்கிய நிலையில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தலை முடியை அதிகமாக வைத்து விதவிதமான ஹேர்ஸ்டைலில் பள்ளிக்கு வருகின்றனர். அவர்களை பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் பாலாஜி மாணவர்களை அழைத்து பலமுறை எடுத்துக் கூறியும் முடியை வெட்டாமல் வந்ததை அடுத்து நேற்று காலை பள்ளிக்கு வித விதமான ஹேர்ஸ்டைலில் வந்த மாணவர்களை கண்டறிந்து பள்ளி ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர் திருவொற்றியூர் மாநகராட்சி 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் ஆகியோர் மரத்த அடியில் சேர் போட்டு மாணவர்களை அமர வைத்து முடி வெட்டினர்.

மேலும் சலூன் கடை ஊழியர்களை வரவழைத்து மாணவர்களுக்கு முடிவெட்டி விட்டனர். நான்கு மாதங்களாக தலை முடியை வெட்டாமல் பள்ளிக்கு வந்த மாணவன் தந்தை கண் முன்னே மாணவனுக்கு முடி வெட்டி விட்டனர். தனியார் பள்ளிக்கு நிகராக அரசு பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தலை முடியை சீராக வைத்திருக்க வேண்டும் சீருடையை ஒழுங்காக அணிய வேண்டும் கை விரல்களில் உள்ள நகங்களை வெட்டி சரி செய்து இருக்க வேண்டும்.

உள்ளிட்ட ஒழுக்கங்களை பள்ளியிலிருந்து கற்பிக்கும் வகையில் இந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க படுவதாக பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் பாலாஜி தெரிவித்தார்



போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையில் நேற்று நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பள்ளிகளில் விலையில்லா சைக்கிள்கள்,நோட்டுப் புத்தகம் சீருடை மற்றும் தையற்கூலி ஆகியவற்றை மாணவ மாணவிகளுக்கு வழங்கி சிறப்பித்தார்கள். முதலில் பொன்பேத்தி அரசு நடுநிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் சீருடை தையற்கூலி ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார். மேலும் புனித தெரசா அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள்களை வழங்கி சிறப்பித்தார். மேலும் வடமட்டத்தில் அமைந்துள்ள அரசு தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு சீருடை மற்றும் தையற் கூலி வழங்கினார். இந்நிகழ்வில் முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

# சங்கரன்பந்தல் அரசு தொடக்கப் பள்ளியில் மாதாந்திர பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம்



தரங்கம்பாடி, ஜூன். 24-

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா உத்திரங்குடி ஊராட்சியில் அரசு தொடக்கப் பள்ளியில் மாதாந்திர பள்ளி மேலான்மைக்குழு கூட்டம் பள்ளி மேலான்மைக் குழு தலைவர் கற்புக்கரசி தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் லெனின் மேசாக் முன்னிலை வகித்தார். பள்ளி தலைமை ஆசிரியர் இளங்கோவன் வரவேற்று பேசினார்.

இதில், பள்ளி வளர்ச்சிக்கும் அரசு மாணவர்களுக்கு வழங்கும் திட்டங்களை குறித்து மாணவர்களின் பெற்றோர்களுடன் உரையாடல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி பள்ளிக் கல்வித் துறை சார்பில் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல் மதிய உணவு, பாடக புத்தகங்கள், பள்ளி சீருடைகள், காலணிகலன்கள் வழங்கி வருகிறது. அரசு பள்ளிகளில் சேர்ப்பதால் மாணவர்களுக்கு கிடைக்கும் நன்மைகளைப் பற்றியும் தலைமை ஆசிரியர் இளங்கோவன் பெற்றோர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் பள்ளியில் புதிய மாணவர்களை சேர்க்கைகளுக்காக தங்கள் சுற்றியுள்ள பெற்றோர்களுக்கு அரசுப் பள்ளியில் சேர்ந்து பயின்றால் மாணவர்களுக்கு கிடைக்கும் பயன்களை குறித்தும், அரசு வழங்கும் சலுகைகளை குறித்தும் விளக்கம் அளித்தார். தொடர்ந்து அரசு பள்ளிகளில் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளை சேர்ப்பதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினார்.

கூட்டத்தில் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் பள்ளி உதவி ஆசிரியர் ராஜகலா நன்றியுரை ஆற்றினார்.

வைத்திக்கோவில் ஸ்ரீ தாளவனேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகத்தையொட்டி

# யானையில் கொண்டு வரப்பட்ட தீர்த்தம் சுற்றுவட்டார பகுதி பொதுமக்கள் பரவசம்



கீரனூர், ஜூன். 24-

வைத்திக்கோவில் ஸ்ரீ தாளவனேஸ்வரர் கோவில் கும்பாபிஷேகத்தை யொட்டி யானையில் கொண்டு வரப்பட்ட தீர்த்தத்தை பார்த்த சுற்றுவட்டார பகுதி பொதுமக்கள் பரவசமடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் வைத்திக்கோவிலில் உள்ள ஸ்ரீ தாளவனேஸ்வரர் கோவிலானது சுமார் 1200 வருட பழமையானது. சோழர்கள், பல்லவர்கள், விஜயநகர பேரரசு மற்றும் புதுக்கோட்டை தொண்டைமான் ஆகிய மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டு வரலாற்று சிறப்புகளை கொண்ட தலமாகும். நாளை காலை 10 மணியிலிருந்து 11 மணிக்குள் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவானது வெகு விமர்சையாக நடைபெற இருக்கின்றது.

புதுக்கோட்டை திருக்கோயில்களை சேர்ந்த வைத்திக்கோவில் ஸ்ரீ தாளவனேஸ்வரர் உடனுறை மங்களநாயகி திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கிறது. அதனையொட்டி கடந்த திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு விக்னேஸ்வர பூஜை உடன் துவங்கி, மகா கணபதி ஹோமம், மஹாலட்சுமி ஹோமம் ,நவக்கிரக ஹோமம், தன பூஜை, கோ பூஜை,கிராம சாந்தி,சாந்தி ஹோமம்,வாஸ்து சாந்தி என தொடர்ந்து யாக பூஜைகள் செய்து. நேற்று காலை 8 மணிக்கு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து தீர்த்தங்கள் எடுத்து. ஆட்சி உரணி கரையில் இருக்கும் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு பூஜைகள் செய்து அங்கிருந்து மேளதாளங்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க யானை மூலமாக தீர்த்தக்குடம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

வைத்திக்கோவில் கிராமத்தார்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முளைப்பாரியும் எடுத்து வரப்பட்டு யாகசாலையை சுற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யானைக்கு கஜ பூஜை செய்து யாகசாலை நிகழ்வுகள் துவங்கின. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் முன்பு அமைக்கபட்டுள்ள இறந்த கோவில் மார்ட்டின் சிலைக்கும் நேற்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நிகழ்வில் ஏராளமான கிராமத்தார்களும் சுற்றுவட்டார பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கும்பாபிஷேகத்தை முன்னிட்டு காலை 11:30 மணிக்கு அன்னதானமும் இரவு 10 மணிக்கு வள்ளி திருமணம் நாடகம் நடைபெற இருக்கின்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள், நாட்டார்கள், சுற்றுவட்டார பொதுமக்கள் செய்து வருகின்றனர்.



காரைக்காலில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்வு கூட்டத்தில் சென்ற விவசாயிகள் குறை தீர்வு கூட்டத்தில் சில குறைகலை காரைக்கால் மாவட்ட ஆட்சியரின் முயற்சியால் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றி தந்த காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் விவசாயிகள், விவசாய சங்கத்தினர், பாசனதார் சங்கத்தினர் ஆகியோர் ஆட்சியரை பாராட்டி நினைவு பரிசை வழங்கினார்கள்.



காரைக்கால் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட கரீம்நகர் பகுதிக்கு குறைந்த மின்னழுத்தம் பல நாட்களாக வந்ததின் காரணமாக சரியான நேரத்தில் குடிதண்ணீர் கிடைக்காததாலும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானதின் காரணமாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிமிடம் அப்பகுதியில் வாழும் பொதுமக்கள் சந்தித்து முறையிட்டதன் காரணமாக தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் முயற்சியால் மின்துறையுடன் கலந்த ஆலோசித்து ரூபாய் 16 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக ( 200KV) திறன் கொண்ட மின்மாற்றி அமைக்கும் பணியினை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம் நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மின்துறை இளநிலை பொறியாளர் சாதிக் மற்றும் அப்பகுதியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

# போட்டிகளில் வெற்றி பெறுவதற்கு பயிற்சியும், முயற்சியும் முக்கியம் மாணவர்களுக்கு கல்வி அதிகாரி ஆலோசனை



புதுக்கோட்டை, ஜூன்24,

தமிழ்மொழியைஅழகாக எழுதி வருபவர்களை ஊக்குவிக்கவும், இதனடிப்படையில் பிற மாணவர்களுக்கு தமிழில் அழகாக எழுதும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் தமிழ் கையெழுத்துப்போட்டி நடத்திடுவதற்கு 2022-2023 ஆம் தமிழ் வளர்ச்சித்துறை மானியக்கோரிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதற்கிணங்க புதுக்கோட்டை மாவட்ட பள்ளிக்கல்வித்துறையின் வாயிலாக மாவட்ட அளவிலான 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும்,10-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை மாணவர்களுக்கு ஒரு பிரிவாகவும் தமிழ் கையெழுத்துப்போட்டி புதுக்கோட்டை முதன்மைக்கல்வி அலுவலக தேர்வுக்கூட அரங்கில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மஞ்சுளா கலந்துகொண்டு தலைமை தாங்கி போட்டியினை தொடங்கி வைத்து பேசும்போது கூறியதாவது:- பள்ளிப்படிப்புடன் ஏனைய துறைகளிலும் மாணவர்கள்தம்திறமையை வளர்த்துக்கொள்ளும் நோக்கில் இத்தகைய போட்டிகளில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்துகொள்ளவேண்டும். இப்போட்டியில் 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரையிலான பிரிவில் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கப்பரிசாக முதல் பரிசாக ரூ 3 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ2 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ ஆயிரமும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட இருக்கிறது.

இதேபோல 10-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான பிரிவில் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கப்பரிசாக முதல் பரிசாக ரூ 4 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ 3 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ 2 ஆயிரமும், பாராட்டுச்சான்றிதழும் வழங்கப்பட உள்ளது. போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்கள் அனைவரும் வெற்றி பெற இயலாது. இருப்பினும் வெற்றி பெறுவதற்கு தொடர்ச்சியான பயிற்சியும், முயற்சியும் முக்கியமாகும். வெற்றி பெறாதவர்களை தொடர்ச்சியான ஊக்கப்படுத்துதலின் வாயிலாக வெற்றி பெற வைக்கமுடியும். எனவே இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களை ஆசிரியர்கள் ஊக்கப்படுத்துவதுடன் வெற்றிபெறாதவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

நடுவர்களாகபாலசுப்பிரமணியன்,பரமசிவம்,சத்யா,ஜெயந்தி,ஆண்டியப்பன்,விஜயலெட்சுமி ஆகிய ஆசிரிய, ஆசிரியைகள் செயல்பட்டனர். போட்டியானது சொல்லுவதை எழுதும் முறையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் ராஜூ, முதன்மைக்கல்வி அலுவலக சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சாலை செந்தில், முதன்மைக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் வேலுச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சித்துறையின் சுப்புராமன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூரில் பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாடு பற்றிய விழிப்புணர்வு ஓவியப்போட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்



அரியலூர் ஜூன் 24

அரியலூர் மாவட்டத்தில் மீண்டும் மஞ்சப்பை மற்றும் பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாடு குறித்த விழிப்புணர்வு ஓவியப்போட்டியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்னா துவக்கி வைத்தார்.

அரியலூர் மாண்ட்ஃபோர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் அரியலூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் அரியலூர் சார்பில், ஒரு முறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை, மீண்டும் மஞ்சப்பை, பிளாஸ்டிக் இல்லா தமிழ்நாடு குறித்து, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கிடையிலான விழிப்புணர்வு ஓவியப்போட்டியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதி மொழியான, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க என்னுடைய தினசரி வாழ்க்கையில் சாத்தியமான அனைத்து மாற்றங்களையும் செய்வேன் என்றும், எனது குடும்பம், நண்பர்கள் மற்றும் பலருக்கும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பழக்கவழக்கங்களின் முக்கியத்துவம் குறித்து தொடர்ந்து ஊக்குவிப்பேன் என்றும் உறுதி அளிக்கிறேன் என, சுற்றுச்சூழல் உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆனி மேரி ஸ்வர்னா வாசிக்க, அனைத்து அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் எம். செந்தில்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், த.விஜயலட்சுமி, உதவி சுற்றுச்சூழல்பொறியாளர் பா.அகல்யா, மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) ஜெயா, பள்ளிக்கல்வி ஆய்வாளர் பழனிச்சாமி, அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

## ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டுக்கு

# அனுமதி கேட்கும் மனு மீது கலெக்டர்கள் முடிவு எடுக்கலாம் உயர் நீதிமன்றம்



மதுரை, ஜூன். 24-

**ஜல்லிக்கட்டு, வடமாடு மஞ்சுவிரட்டுக்கு அனுமதி கேட்டு அளிக்கப்படும் மனு மீது மாவட்ட ஆட்சியர்கள் முடிவெடுக்கலாம் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

சிவகங்கைமாவட்டம் திட்டக்கோட்டையைச் சேர்ந்த சங்கர் கணேஷ், உயர்நீதிமன்றக்கிளையில் தாக்கல் செய்த மனு: திட்டக்கோட்டையில் 200-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. இங்குள்ள முத்து மாரியம்மன் கோயிலில் முளைப்பாரி திருவிழாவில் ஜூலை 29-ல் வடமாடு மஞ்சுவிரட்டு நடத்த திட்டமிட்டுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜல்லிக்கட்டு, வடமாடு மஞ்சுவிரட்டு நடைபெறும் கிராமங்களின் பெயர்கள் அரசிதழில் வெளியிடப்படும். இந்த ஆண்டு அரசிதழில் எங்கள் கிராமத்தின் பெயர் இடம்பெறவில்லை. எனவே, அரசிதழில் எங்கள் கிராமத்தின் பெயரை சேர்த்து வடமாடு மஞ்சுவிரட்டு நடத்த அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு தலைமை நீதிபதி கங்காபூர்வாலா, நீதிபதி சுப்பிரமணியன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு வழக்கறிஞர் சார்பில், ஜனவரி முதல் மே மாதம் வரை மட்டுமே ஜல்லிக்கட்டு, வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடத்த அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தலைமை நீதிபதி, ஜல்லிக்கட்டு, வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் நடத்த அனுமதி கேட்டு அளிக்கப்படும் மனுவை அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே பரிசீலனை செய்து முடிவு எடுக்கவேண்டும். அதன்படி மனுதாரரின் மனு குறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பரிசீலனை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, அண்டக்குளம் அடுத்த புதுக்குடியான்பட்டி மழவராயர் வகையறார்களால் நடத்தப்படும் ஸ்ரீ சப்பாணி கருப்பர் ஆலய மகா கும்பாபிஷேக விழா முன்னிட்டு நேற்று வீரக்குடி ஸ்ரீ குமராண்டி கோவிலிலிருந்து தீர்த்த குடம் மற்றும் முளைப்பாரி ஸ்ரீ சப்பாணி கருப்பர் சிலை எடுத்துக்கொண்டு வந்தனர். நாளை மஹா கும்பாபிஷே விழா நடைபெற உள்ளது.



புதுக்கோட்டை மன்னர் ராஜா ராஜகோபால தொண்டைமானின் 101வது பிறந்தநாளையொட்டி மரம் நண்பர்கள் சார்பில், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் மேல்புரம் உருவாக்கப்பட்டுள்ள ராஜகோபால தொண்டைமான் உயிர்க்காற்று பூங்காவில் மரக்கன்றுகள் நடப்பட்டது. நிகழ்வில் மரம் நண்பர்களின் ஒருங்கிணைப்பாளர் சா.விஸ்வநாதன், செயலர் பழனியப்பா கண்ணன், உறுப்பினர்கள் பாரதவிலாஸ் கிருஷ்ணமூர்த்தி, பொறியாளர் ரியாஷ் கான் ஆகியோர் பங்கேற்றனர்.

## பாஜக பல மாநிலங்களில்

# தனது செல்வாக்கை இழந்துவிட்டது பாட்னா கூட்டத்தில் ராகுல் காந்தி பேச்சு



பாட்னா, ஜூன். 24-

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் உள்பட பல மாநிலங்களில் பாஜக தனது செல்வாக்கை இழந்துவிட்டது என்றும் அங்கெல்லாம் பாஜகவை காண முடியாது என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள பாஜக அல்லாத எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் பிஹார் தலைநகர் பாட்னாவில் நேற்று நடைபெற்றுது. பிஹார் முதல்வர் நிதிஷ் குமாரின் அழைப்பின் பேரில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், சிவ சேனா(உத்தவ் பிரிவு) தலைவர் உத்தவ் தாக்கரே உள்ளிட்டோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, இந்தியாவில் தற்போது சித்தாந்த போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவை ஒற்றுமைப் படுத்துவதற்கான சித்தாந்தத்துக்கும், ஒற்றுமையை சிதைக்கும் சித்தாந்தத்துக்கும் இடையே இந்தப் போர் நடந்து கொண்டிருக்கிறது. நாட்டில் வெறுப்பையும் வன்முறையையும் பாஜக பரப்பிக் கொண்டிருக்கிறது. நாட்டை பிளவுபடுத்துகிறது. நாம் அன்பையும் ஒற்றுமையையும் பரப்புவதற்காக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவை தோற்கடிப்பதற்காக நாம் அனைவரும் இங்கே ஒன்றுகூடி இருக்கிறோம்.

இந்தக் கூட்டத்தில் உங்கள் மத்தியில் நான் சொல்கிறேன். தெலங்கானா, மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பாஜகவை எங்கேயும் பார்க்க முடியவில்லை. அந்தக் கட்சி செல்வாக்கை இழந்துவிட்டது. இந்த 4 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றி பெறும். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம். ஏனெனில், நாம் ஏழைகளின் நலனுக்காக பாடுபடுகிறோம். ஆனால், பாஜக 2-3 தொழிலதிபர்களின் நலனுக்காகப் பாடுபடுகிறது. நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சி மிகப்பெரிய ஆதரவைப் பெற்று வருகிறது. கர்நாடகாவில் பாஜக தோற்கடிக்கப்பட்டது போல வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக தோற்கடிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## செந்துூரான் பொறியியல் கல்லூரியில்

# முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழா




**புதுக்கோட்டை, ஜூன். 24-**

புதுக்கோட்டை மாவட்டம் லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூயில் முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு மாணவர்களுக்கான் துவக்க விழா நடைபெற்றது.

கல்லூரி தலைவர் செல்வராஜ் விழாவிற்கு தலைமை வகித்தார். விழாவில் கல்லூரியின்; மேலாண்மை இயக்குநர் வயிரவன், துணைத் தலைவர் சோம. நடராஜன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ராமையா, தியாகராஜன், இயக்குநர் கனேசன் மற்றும் மனித வள இயக்குநர் மீனாவயிரவன், செயல் இயக்குநர் பாண்டிகிருஷ்ணன், திட்ட இயக்குநர் யோகநாதன் மற்றும் குழு உறுப்பினர் செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கு வருகைபுரிந்த அனைவரையும் கல்லூரியின் முதலாமாண்டு துறைத்தலைவி சிவகாமசுந்தரி வரவேற்றார்.

கல்லூரியின் முதன்மைச் செயல் அலுவலர் கார்த்திக், முதல்வர் கணேஷ்பாபு ஆகியோர் சிறப்புரையாற்றினர். பேராசிரியர் சீனிவாசன் சிறப்பு விருந்தினர் யோசி நிறுவனத்தின் தலைவர் முருகபாரதியை அறிமுகம் செய்து வைத்தார். நிறைவில் கணினிப்பொறியியல் துறைபேராசிரியை தமிழ்இலக்கியா, நன்றி கூறினார்.

# நல்லாம்பாளையத்தில் திமுக மூத்த முன்னோடிக்கு போக்குவரத்து அமைச்சர் மரியாதை



அரியலூர் ஜூன் 24

அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே, நல்லாம்பாளையம் கிராமத்தில் வசிக்கும் திமுக மூத்த முன்னோடி ஓய்வு பெற்ற பச்சமுத்து ஆசிரியரை, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ் .சிவசங்கர் நேரில் சந்தித்து சால்வை அணிவித்து மரியாதை செய்தார்.

செந்துறை பகுதியில் நடைபெற்ற பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ். சிவசங்கர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மாவட்டத்தில் உள்ள மூத்த முன்னோடிகளை கௌரவிக்கும் விதமாக, குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியம், நல்லாம்பாளையம் கிராமத்தை சார்ந்த, திமுக மூத்த முன்னோடி பச்சமுத்து ஆசிரியர் இல்லம் சென்று, அவருக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன், அவரது உடல் நலம் குறித்தும் விசாரித்தார்.




புதுக்கோட்டை மாவட்டம் கலெக்டர் அலுவலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பெண் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கான இரண்டாவது காலாண்டு கூட்டம், கலெக்டர் மெர்சி ரம்யா தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதப்பிரியா, உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக்.மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாமன்னர் ராஜகோபால தொண்டைமானுக்கு மரியாதை



**புதுக்கோட்டை , ஜூன். 24-**

**ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக்.மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் புதுக்கோட்டை மாமன்னர் ராஜகோபால தொண்டைமானின் 101ஆவது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செய்தனர்.**

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் ஒன்பதாவது மன்னரான மாமன்னர் ராஜகோபால தொண்டைமான் 1922 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் நாள் புதுக்கோட்டையில் பிறந்தார். அவரது நூற்றியோராவது பிறந்த நாள் விழா நேற்று புதுக்கோட்டை மக்களால் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மாமன்னர்இராஜகோபல தொண்டைமான் ஆட்சி காலத்தில் புதுக்கோட்டை சமஸ்தான மக்கள் வளமுடன் நலமுடன் வாழ்ந்தனர். இந்திய அளவில் சமஸ்தானத்துக்கென்று தனியாக அம்மன் காசு என்ற நாணயத்தை வெளியிட்ட பெருமை தொண்டைமான் மன்னர் பரம்பரையைச் சேரும்.

இந்திய அரசாங்கம் சமஸ்தானங்களை இணைக்க வேண்டும் என்று அறிவித்தவுடன் முதன் முதலில் தமது சமஸ்தானத்தை இந்திய அரசாங்கத்துடன் இணைத்து வரலாற்றில் இடம்பிடித்த மன்னர் ராஜா இராஜகோபால தொண்டைமான் ஆவார். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. புதுக்கோட்டை சமஸ்தான மன்னரின் பெருமைகளை விளக்கி "புதுக்கோட்டை நம் புகழ்க்கோட்டை எனும் பாடல் எழுதியதன் மூலம் உலகத் தமிழர்களால் பாராட்டப்பட்ட கவிஞர், பள்ளியின் முதல்வர் தமிழ்ச்செம்மல் தங்கம்மூர்த்தியின் வழிகாட்டுதலின்படி ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் புதுக்கோட்டை சமஸ்தான கடைசி மன்னர் ராஜா ராஜகோபால தொண்டைமானின் நூற்றியோராவது பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து அங்குள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். மேலும் மாணவ மாணவிகள் மன்னர் அரண்மனையை சுற்றிப் பார்த்து வியந்தனர். வரலாற்றுப் பெருமைகளை மாணவர்கள் அறிந்து மகிழ்ச்சி அடைந்தனர். நிகழ்வில் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், மேலாளர் ராஜா, ஒருங்கிணைப்பாளர் அபிராமசுந்தரி, ஆசிரியர்கள் துர்காதேவி, சின்னையா, ரவிக்குமார், பாலமுருகன் காசாவயல் கண்ணன் உள்ளிட்ட ஆசிரியப்பெருமக்கள் கலந்து கொண்டனர்.

# அரியலூரில் நடிகர் விஜய் பிறந்தநாள் விழா பொதுமக்களுக்கு உணவு வழங்கல்



அரியலூர், ஜூன். 24-

அரியலூரில் திரைப்பட நடிகர் விஜய் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

திரைப்பட நடிகர் தளபதி விஜயின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு, அரியலூர் நகர விஜய் நற்பணி மன்றம் சார்பாக, பேருந்து நிலையத்தில், 300க்கும் மேற்பட்டோருக்கு, சிக்கன் பிரியாணி வழங்கப்பட்டது. விழாவுக்கு மன்றத்தின் மாவட்ட தலைவர் சிவா தலைமை ஏற்றார். நகர தலைவர் பாலா, நகரச் செயலாளர் ஹரிகிருஷ்ணன், நகர துணை தலைவர் சுரேந்தர், நகர துணை செயலாளர் மீதுன் முன்னிலை வகித்தனர். நகர துணை அமைப்பாளர்கள் கிஷோர், பிரேம், பிரவீன், வசந்த், இணை செயலாளர் சாரதி, வழக்கறிஞர் அணி கண்ணன் மற்றும் நிர்வாகி ஹரி, ஆகாஷ், மதி, நவீன், ராஜா, சந்தோஷ், விஜய் ஆகியோர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஷிம்லாவில் எதிர்க்கட்சிகளின் அடுத்த கூட்டம்: காங்கிரஸ் அறிவிப்பு

# பாட்னா கூட்டம்: அகில இந்திய அளவில் பாஜக தோற்கடிக்கப்படும்





# ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டுக்கு கலெக்டர்களே அனுமதி வழங்கலாம்


சென்னை / புதுக்கோட்டை | 24.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கா. அப்பாத்துரை , தமிழகத் தமிழறிஞர் (பி.1907) (இ.1989)



கண்ணதாசன் , தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் (பி.1921) (இ.1981)



எம். எஸ். விஸ்வநாதன் , தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் (பி.1928) (இ.2015)



நீல. பத்மநாபன் , தமிழக எழுத்தாளர் (பி.1938)



## இன்றைய நினைவு நாள்

தர்மானந்த தாமோதர் கோசாம்பி , இந்தியப் பௌத்தப் பேரறிஞர் (பி.1876) (இ.1947)



வி. வி. கிரி , இந்தியாவின் 4-வது குடியரசுத் தலைவர் (பி.1894) (இ.1980)



சிட்டி பெ. கோ. சுந்தரராஜன் , தமிழக எழுத்தாளர், திரைப்பட விமர்சகர் (பி.1910) (இ.2006)

